எம்.சி.ஓ.பி எண்: 61/2025 தேதி: 09.01.2026

மசா. : 1

பெயர் : மோனிகா

க /பெ. : ஹரி

வயது : 30

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரி. விபத்து குறித்து புகார் நான்தான் கொடுத்தேன். குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப் பட்டுள்ளது என்றால் தெரியாது. நான் பி,சி.ஏ படித்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் குற்றப்பத்திரிக்கை இந்த விபத்திற்கானதுதான் என்றால் சரி. அது எமசாஆ 1 ஆகும். குற்றப்பத்திரிக்கையில் என் கணவர்தான் குடிபோதையில் விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என காணப்படுகிறது என்றால் அது பற்றி தெரியாது. குற்றப்பத்திரிக்கையில் இரண்டு வாகனங்கள் எதிரே எதிரே மோதியதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கணவர் தான் குடித்துவிட்டு அதிவேகமாக சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் எ்னறால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு பெர்மிட் இல்லை என்பதால் இந்த வழக்கு அமண்மெண்ட்க்கு பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தால் மனு தள்ளுபடி ஆகவேண்டும் எ்னறால் சரியல்ல. என் கணவர் தினகரன் செய்திதாழில் ஜென்ரல் மேஜேனராக பணிபுரிந்தார். அவருடைய பணி நியமண ஆணை தாக்கல் செய்யவில்லை. என் கணவரின் சம்பளம் வங்கி கணக்கில் வரும். அந்த வங்கி கணக்கு விவரம் தாக்கல் செய்யவில்லை. அதை தாக்கல் செய்தால்தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரியல்ல. என் கணவர் வருமான வரி செலுத்தி வந்தார். அந்த வருமான வரி ஆவணம் தாக்கல் செய்யவில்லை. மசாஆ 16 ஆவணம் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. என்கணவர் நான் கூறும் விதமாக சம்பளம் வாங்கவில்லை என்றாலும் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு பெர்மிட் இல்லாத காரணத்தால் இரண்டாம் எதிர் மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல எ்னறால் சரியல்ல.நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என்னுடைய கணவரின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.